**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13 ம் நாள் திங்கட்கிழமை**

<u>O.S. 115/2018</u>

**வா.சா.1**

**பெயர். சசிக்குமார், த/பெ. தட்சினாமூர்த்தி**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>** :

கடந்த 24.02.2016 தேதிய உயில் ஆவணம் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும்,

கடந்த 29.12.2014 ம் தேதிய நகர அளவை பதிவேடு புலப்படத்துடன் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகவும்,

கடந்த 20.06.2017 ம் தேதிய நகர அளவை பதிவேடு புலப்படத்துடன் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகவும்,

கடந்த 15.09.2017 ம் தேதிய மின்கையொப்பம் இடப்பட்ட புலஎண் 890,890A, 889 ஆகியவற்றின் TSLR கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.4** ஆகவும் குறியீடு செய்து தாவாப்படி தீர்ப்பாகவேண்டுகிறேன்.

(பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான ஆவணங்கள் மோசடியானது எனவும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் எனவும் ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்படி ஆட்சேபனை தீர்ப்பின் போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என முடிவு பகரப்பட்டது).

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4--- வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.//

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் Stay கேட்டுள்ளேன். சிவப்பிரகாச பண்டாரம் மடத்திற்கு சொந்தமான தாவா சொத்தினை மடத்தின் ஆதீன கர்த்தாவாக திரு. ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய சிவப்பிரகாச பண்டார சன்னதி கடந்த 10.01.1956 ஆம் ஆண்டு திருவாரூர் நகரம் மடப்புரம் வன்மீகபுரத்தில் இருந்து வரும் ராஜ சோழகர் மனைவி கமலத்தம்மாவிடம் ரொக்கமாக தொகை பெற்றுக்கொண்டு புஞ்சை சாகுபடி செய்ய அனுமதி கொடுத்ததாக நான் வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் கூறியுள்ள சங்கதிகள் தொடர்பாக ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தின் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் யாருக்கு சொந்தமான சொத்து என்றால் சிவபிரகாச பண்டார மடத்துக்கு சொந்தமானதாகும்.

யாரிடம் இருந்து என் பாட்டி கமலத்தம்மாள் தாவா சொத்தின் அனுபவத்தை பெற்றார் என்றால் மடத்தின் ஆதின கர்த்தவான ஸ்ரீ சுப்பிரமணிய சிவப்பிரகாச பண்டார சன்னதியிடமிருந்து அனுபவம் பெற்றார். மேற்படி சுப்பிரமணிய சிவப்பிரகாச பண்டார சன்னதி இடம் இருந்து சாகுபடி அனுமதி பெற்றதற்கு ஆவணங்கள் எதையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கமலத்தம்மாள் என்னுடைய பாட்டி என்பதை நிரூபிக்கக் கூடிய ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கமலத்தம்மாள் என்னுடைய பாட்டி என்பதற்க்கோ தாவா சொத்தினை மேற்படி சுப்ரமணிய சிவப்பிரகாச பண்டார சன்னதி மூலம் அனுபவம் பெற்றதற்கோ இந்நீதிமன்றத்தில் நான் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

சிவப்பிரகாச பண்டாரமடம் எவ்வித வருமானமும் இன்றி இருந்து வருதாக நான் வழக்குரையில் சொல்லி உள்ளதற்கு ஆதரவாக நான் ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடந்த 15.04.2004 ஆம் ஆண்டு ஸ்ரீலஸ்ரீ கல்யாண சுந்தரன சிவப்பிரகாச சன்னதிகள் என் தாயார் திருமதி மாரியம்மாள் அவர்களிடம் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் இல்லை. மேற்படி 15.04.2004 தேதியிட்ட ஒப்பந்தத்தை அனுசரித்து கிரயம் பெற்று கொள்வதற்கு ஆதரவாக நீதிமன்ற நடவடிக்கைகள் எதுவும் என் தாயாரால் மேற்கொள்ளப்பட்டதா என்றால் இல்லை. நான் வழக்குரையில் கூறியுள்ள 15.04.2004 தேதியிட்ட ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ள கிரைய தொகையான ரூ. 17,47,050/- யை மேற்படி சிவப்பிரகாச மடத்தின் ஆதினகர்த்தாவிடம் கொடுத்ததற்கு ஆதரவாகவும் ஆவணங்களை எதையுமே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடந்த 15.04.2004 தேதியில் நான் வழக்குகளில் கூறியுள்ளது போல எவ்வித ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றாலும், தொகை எதுவும் ஆதினகர்த்தாவிடம் வழங்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி 15.04.2004 தேதியிட்ட கிரய ஒப்பந்தத்தை அனுசரித்து பதிவு கிரய ஆவணம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். கடந்த 15.04.2004 தேதியிட்ட கிரய ஒப்பந்தத்தை அனுசரித்து பதிவு கிரய சாசனம் ஏற்படாத நிலையில் தாவா சொத்தை பொறுத்து உரிமை பெயர் மாற்றம் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் கண்ட சொத்தும் கடந்த 15.04.2004 இல் ஏற்பட்டதாக சொல்லப்படும் கிரய ஒப்பந்தத்தில் கண்ட சொத்தும் ஒன்றுதான் என்றால் சரிதான். மேற்படி கிரய ஒப்பந்தத்தை அனுசரித்து தான் என் தாயார் உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான்.

தாவா சொத்தை பொறுத்து என் தாயாருக்கு உரிமை மாற்றம் ஏற்படாத நிலையில் அதைக் குறித்து உயில் ஆவணம் ஏற்படுத்த என் தாயாருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் என் தாயார் பேரில் பட்டா பெயர் மாற்றம் பெறப்பட்டதற்கான ஆவணம் என்றால் சரிதான். என்னுடைய தாயாருக்கு எதன் அடிப்படையில் பட்டா பெயர் மாற்றம் ஏற்பட்டது என்றால் மேற்படி 15.04.2004 ஏற்பட்ட ஒப்பந்தத்தை அனுசரித்து பெயர் மாற்றம் ஏற்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.3, 4 ஆவணங்கள் தாவா சொத்துக்களை பொறுத்து என் பெயரில் ஏற்பட்டுள்ள நகர அளவை பதிவேடுகள் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3, 4 ஆவணங்களில் எதன் அடிப்படையில் என் பெயர் மாற்றம் ஏற்பட்டது என்றால் என் தாயார் என் பேரில் எழுதி வைத்த வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தின் அடிப்படையில் பெயர் மாற்றம் ஏற்பட்டதாகும். என் பேரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவை எதிர்த்து இந்த வழக்கு பிரதிவாதிகளால் திருவாரூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் மேல்முறையீடு செய்யப்பட்டு அதில் என் பெயருக்கு ஏற்பட்ட பட்டா பெயர் மாற்றம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி வருவாய் கோட்டாட்சியர் விசாரணையின் துவக்கத்திலேயே பிரதிவாதிகளுக்கு அதிகாரம் முகவர் ஆவணம் அளித்துள்ளதாக சொல்லப்படும் ஸ்ரீலஸ்ரீ கல்யாண சுந்தர சிவப்பிரகாச பண்டார சன்னதிகள் காலமாகிவிட்டார் அதனை மறைத்து பிரதிவாதிகள் மேற்படி உத்தரவை பெற்றுள்ளனர். (**கடந்த 23.07.2018 தேதிய திருவாரூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறை உத்தரவு பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் உத்தரவை எதிர்த்து என்னால் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நிர்வாக நீதிபதி அவர்களிடம் சீராய்வு மேல்முறையீடு

செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டில் திருவாரூர் வருவாய் கோட்டாட்சியர் செயல்முறை உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். **(கடந்த 25/07/2023 தேதிய திருவாரூர் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நிர்வாக நீதிபதி அவர்களின் செயல்முறை உத்தரவு நகல் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி பி.சா.ஆ.2 திருவாரூர் மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவில் என் பாட்டி கமலதம்மாள் பெயரில் ஆன பதிவு கிரய ஆவணம் 2935/1974 தேதி 15.11.1974 அடிப்படையில் தான் பி.சா.ஆ.1 ரத்து செய்யப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 15.11.1974 லேயே தாவா சொத்தை பொறுத்து என் பாட்டி கமலத்தம்மாள் பெயரில் திருவாரூர் சிவப்பிரகாச மட ஆதீனம் தர்மகர்த்தா பதிவு கிரய ஆவணம் எழுதிக் கொடுத்திருக்கும் நிலையில், பின் 15.04.2004 ல் கிரய ஒப்பந்தம் என் தாயார் பெயரில் தாவா சொத்தை பொறுத்து எவ்வாறு ஏற்பட்டிருக்கும் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. கமலத்தம்மாளின் இறப்பு சான்றிதழோ , வாரிசு சான்றிதழோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் என் பாட்டி பெயரில் ஏற்பட்டதாக சொல்லப்படும் கடந்த 15.11.1974 தேதிய பதிவு கிரய ஆவணத்தை பொறுத்து சொல்லப்படவில்லை என்றால் சரிதான். என் பாட்டி கமலத்தம்மாள் என் தாயார் மாரியம்மாள் அவர்களுக்கு எவ்வித உயிலோ, செட்டில்மெண்டோ எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி என் பாட்டி என் தாயாருக்கு முறைப்படி சொத்தை மாற்றம் செய்யாத நிலையில் வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தின்படி தாவா சொத்தின் பேரில் எனக்கு எவ்வித உரிமைமூலமும் சித்திக்காது என்றால் சரியல்ல.

மேலும், மேற்படி ஆவணம் இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.2 திருவாரூர் மாவட்ட வருவாய் அலுவலர் சீராய்வு உத்தரவின்பேரில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்த

பிரதிவாதிகளால் நீதிபேராணை வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் என்னை தரப்பினர்களாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி நீதி பேராணை உத்தரவில் பி.வா.சா.ஆ.2 திருவாரூர் மாவட்ட வருவாய் அலுவலரின் சீராய்வு உத்தரவு நீக்கரவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். **(கடந்த 08.04.2024 தேதிய மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் WP No. 26496/2023 உத்தரவு கணினி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (மேற்படி WP No. 26496/2023 வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி நீதிபேராணை விசாரணையில் என் பெயரிலும், திருவாரூர் சார்பதிவாளர் பாலமுருகன் என்பவர் பெயரிலும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் Suo motu contempt க்கு எடுத்து அதில் மேற்படி எனக்கும், பாலமுருகனுக்கும் எதிராக சிறை தண்டனை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். **(கடந்த 05.07.2024 தேதிய மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் Suo motu contempt P.No. 1905 of 2024 in W.P. No. 26496 of 2023 ன் கணினி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி பி.வா.சா.ஆ.5 மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக என்னால் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அதற்கு ஆதரவான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ.3 மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக என்னால் மேல்முறையீடு செய்யப்படவில்லை என்றால் அதுகுறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற Suo motu contempt விசாரணையின்போது பி.வா.சா.ஆ.2 திருவாரூர் மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவில் கண்டுள்ள கடந்த 15.11.1974 தேதிய பதிவு ஆவணம் 2935/1974

ஆவணமானது கிரய ஆவணம் அல்ல என்றும், அது பெந்தக ஆவணம் என்றும் தமிழ்நாடு மாநில பதிவுத்துறை தலைவர் அவர்களால் ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ( W.P. No. 26496 of 2023 **நீதிபேராணை விசாரணையின்போது சென்னை பதிவுத்துறை தலைவர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆணையுறுதி ஆவணம் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). ஸ்ரீலஸ்ரீ கல்யாணசுந்தர சிவப்பிரகாசம் பண்டார சன்னதிகள் பொது அதிகார முகவராக 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் இவ்வழக்கில் பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி விபரம் எப்போது உங்களுக்கு தெரிய வந்தது என்றால் பி.வா.சா.ஆ.1 வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் விசாரணையின்போது தான் எனக்கு தெரிய வந்தது.

மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் 2016 லேயே 1ம் பிரதிவாதியால் மேல்முறையீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். 2016 லேயே 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் குறித்து எனக்கு தெரிய வந்துவிட்டது என்றால் சரிதான். மேற்படி 2016 ல் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து கிரயப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளது குறித்து நன்கு தெரிந்து கொண்டபிறகு வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணமான என் பெயரில் பட்டா பதிவு மாற்றம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து கிரயப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளது பொறுத்து எனக்கு நன்கு தெரிந்துள்ள நிலையில், அதனை நீக்கரவு செய்ய பரிகாரம் கோராமலும், தாவா சொத்தின்பேரில் விளம்புகை கோராமலும் உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் பேரில் நான் எவ்வித காவல்நிலைய புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் எனக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் இருந்தது. அதிலிருந்து என்னை காலி பண்ண சொல்வதற்காக புகார் கொடுத்திருந்தார்கள். நான் வழக்குரையில் கூறியுள்ள வழக்குமூல தேதியில் இந்த பிரதிவாதிகளால் யாதொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்குமூல தேதி கற்பனையானதும், இவ்வழக்கிற்காக புனையப்பட்டதும் என்றால் சரியல்ல. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதால் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள எனக்கு உள்ள செல்வாக்கை பயன்படுத்தி ஆவணங்களை மோசடியாக உற்பத்தி செய்து அதனடிப்படையில் வருவாய் ஆவணங்களை ஏற்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே, நான் தாக்கல் செய்துள்ள தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது பி.வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6--- வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.10.13 17:12:41 +0530